புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/04 - March 2023

# ‘பேசிவிடு மனமே பேசிவிடு’ புதினத்தில் சமுதாயச் சிந்தனைகள்

**ஆய்வாளர்**
**திரு. இரா.தண்டபாணி,**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (த), பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,*
*திருச்சிராப்பள்ளி-620 020.*

**நெறியாளர்**
**முனைவர் த.செல்வராசு,**
*இணைப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
*ஜமால் முகமது கல்லூரி (த), பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது,*
*திருச்சிராப்பள்ளி-620 020.*

**ஆய்வுச் சுருக்கம்:**

இன்றைய சமூகத்தில் ஆண்களுக்கு இணையான வாய்ப்புகள் திருமணமான பெண்களுக்கு கிடைப்பதில்லை. ஒவ்வொரு பெண்ணின் முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்க வேண்டிய ஆண்கள் தடைக்கற்களாக மாறிவிடுகிறார்கள். பெண்ணுக்கு ஆதரவாக எத்தனை பேர் குரல் கொடுத்தாலும் கணவன் துன்புறுத்தும் நேரங்களில் பொறுத்துக் கொள்ளும் மனைவி வாயிலாகப் இன்றும் பெண்கள் அடிமைக் கட்டுகளுள் அகப்பட்டு இருப்பதை அறியமுடிகிறது. ‘பேசிவிடு மனமே பேசிவிடு’ நாவலில் திரைக்கதை எழுதும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற காரணத்தால் மனைவியை வீட்டை விட்டு துரத்தும் கணவன் பற்றிய கருத்தை ஆசிரியர் ஜெய்சக்தி விளக்கியுள்ளார். இவ்வாறு நாவலாசிரியர் தனது ‘பேசிவிடு மனமே பேசிவிடு’ புதினத்தில் வெளிப்படுத்தியுள்ள சமுதாயச் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்ந்து வெளிக்கொணர்கிறது.

***கலைச்சொற்கள்:*** *கணவன்–மனைவி உறவு, ஆதரவு, எதிர்ப்பு, துன்புறுத்தல், முன்னேற்றம், மனம் திருந்தல்*

***முன்னுரை:***

*ஆணும் பெண்ணும் கூடி வாழும் நிலையே சமுதாயம் ஆகும். அச்சமுதாயத்தில் ஓர் அங்கமாகப் பெண் பண்டைய காலத்தில் இருந்து இன்று வரை அறிவு, ஆற்றல், ஆளுமை, அன்பு, ஒப்புரவு தொண்டு என்கிற நிலையில் சிறந்திருந்தும் அவளுக்கு சமவாய்ப்பு தரப்படவில்லை. மனித இனத்தின் தோற்றத்திற்குரிய முக்கிய காரணமாகத் திகழ்பவள்*

*பெண். அத்தகைய பெண்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஏராளம். மகளாய், மனைவியாய், தாயாய் எனப் பல நிலைகளிலும் பெண்கள் பல துன்பங்களை எதிர் நோக்கி வாழ்கிறார்கள். அதனை இன்றைய புதின இலக்கியங்கள் மிகச் சிறப்பாகப் பதிவு செய்கிறது எனலாம். அவ்வகையில் ஜெய்சக்தி அவர்களின் 'பேசிவிடு மனமே பேசிவிடு' புதினத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் இன்னல்களையும் சிக்கல்களையும் தெளிவாக எடுத்துக் காட்டி ஆராயப்பட்டுள்ளது.*

***மனைவியைத் திட்டுதல்:***

*வனமாலி ஒரு திரைக்கதை ஆசிரியர் அதனால் அவனுக்குத் தலைக்கணம் அதிகம். தனக்கு மிஞ்சியவர்கள் யாரும் இல்லை என்ற எண்ணம் கொண்டவன். மனைவி சரஸ்வதியை அடிமை போல நடத்துவான். ஒரு நாள் கதை எழுத ஏற்காடு செல்கிறான். அப்போது ஒரு பத்திரிக்கை எழுத்தாளர்களுக்கான திரைக்கதைப் போட்டி நடத்துகிறது. அப்போட்டிக்கு வனமாலியை நடுவராகப் பத்திரிக்கை நியமிக்கிறது அந்தத் திரைக்கதைப் போட்டியில் ச.தி என்ற பெண் எழுதிய கதை முதல் பரிசு பெறுகிறது. அன்று இரவு வழக்கம் போல மனைவிக்கு போன் செய்த வனமாலி கண்டபடி திட்டுகிறான்.*

> ***"அறிவு கெடட நாய் உனக்கெல்லாம் சோறு போட்டு உட்கார வைச்சிருக்கேன் பார்த்தியா? என்னை சொல்லணுமடி அவனவன் எவ்வளவு கஷ்டப்பட்டு போராடி உங்களை எல்லாம் காப்பாத்திக்கிட்டிருக்கிறான்னு தெரியுமா? முன்னூறு பேருடி கதை அனுப்பிச்சிருக்கானுங்க அதுல நூத்தைம்பது கதை நல்லா இருக்கு அதுல அஞ்சு டாப்பா எழுதியிருக்காங்க. சதியாம் ச.தி. ம்ம அப்படியெல்லாம் ஆளுங்க இருக்காங்க. உன்னை மாதிரி மரமண்டையை கல்யாணம் பண்ணிட்டு நானும் வாழ்க்கை நடத்தறேன் பாரு" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.170)***

*என்று ஆரம்பித்தவன் இரண்டு நிமிடங்களுக்கு மேலாகத் தன் வாயில் வந்ததையெல்லாம் பேசிக் கொண்டிருந்த்தாகப் புதின ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.*

> ***"மனஉறுதி இல்லாதவர்கள் என்பதால் தனித்து நின்று செயல்படும் தகுதியும் திறமையும் பெண்களுக்கு இல்லை. வீட்டில் அமைதியான வாழ்வு நடத்தவே அவர்களால் முடியும். வாய்மூடி மௌனியாய் கிடப்பதே பெண்ணுக்குப் பெருமை. ஆணையிடுவது ஆணுக்கு வீரம். ஆணைக்கு அடிபணிவது பெண்ணுக்கு அழகு" (மேலைநாட்டு மெய்ப்பொருளியல், ப.88)***

*என்ற கூற்றில் இடம்பெறும் ஆண்மகனுக்கு எடுத்துக்காட்டாகப் புதினத்தில் வனமாலி படைக்கப்பட்டுள்ளான்.*

***கணவனின் கோபம்:***

*சரஸ்வதி கோயிலுக்குப் போயிருந்தாள் அப்போது அவளுடைய கம்ப்யூட்டரில் மேலோட்டமாக பைல்களைப் பார்த்தவன் கதை என்ற ஃபைல திறந்து பார்த்த பொழுது அவனுக்கு ஆச்சரியம் அதிர்ச்சி எல்லாம் ஒன்றாக தோன்றியது. அதிலே போட்டியில் தேர்ந்தெடுத்த அந்த கதையினுடைய முழு ஸ்கிரிப்ட்டும் டைப்பில் இருந்தது. அப்போது தான், அவனுக்குப் புரிந்தது. சரஸ்;வதி ச.தி. என்றெல்லாம் அனுப்பியிருந்த அந்த சரஸ்வதி வேறு யாரோ அல்ல தன்னுடைய மனைவி தான் என்ற போது உண்மையில் அவனுக்கு ஒரு புறத்தில் மகிழ்ச்சி வந்திருக்கலாம். அது வரவில்லை மாறாக தன்னிடம் மறைத்திருக்கிறாள் என்ற கோபம் எழுந்தது. இவளே நாளைக்குத் தனக்குப் போட்டியாக வரமாட்டாள் என்று என்ன நிச்சயம் என்று ஒரு பயம் அவன் ஆழ்மனதில் கிளம்பியது.*

***மனைவியை அடித்துத் துன்புறுத்தல்:***

*திரைக்கதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது தன் மனைவி சரஸ்வதி என்பதைத் தெரிந்து கொண்ட வனமாலி எப்படி நீ கதை எழுதலாம் என மனைவி சரஸ்வதியிடம் சண்டையிடுகிறான். 'ஆமாம் உன்னை நான் எதுக்காக கல்யாணம் பண்ணிட்டு வந்தேன்*

*பேசாம சோறாக்கிப் போட்டு குழந்தைகளை வளர்க்கறது மட்டும் தான்டி உன் வேலை' என்றான்.*

> ***"வீண்சொற்கள் விஷயங்களை வியர்ந்த மாக்குகின்றன" (உலக அறிஞர்களின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், ப.84)***

*எனக் கணவன் - மனைவி இருவர்க்கும் இடையில் மோதல் ஆரம்பித்தது.*

*அவளுக்குள்ளும் ஒரு விறைப்பு தோன்றியது அப்படி நாம எந்த ஒப்பந்தமும் போடலைங்க. உங்களுக்கு மனைவியா வந்துட்டேன் என்பதற்காக எல்லா அறிவு சார் விஷயங்களிலும் தலையிடக் கூடாது என்று நீங்கள் எப்படி என்னைக் கம்பல் பண்ணமுடியும்?*

> ***"சொல்லி முடிப்பதற்கு முன்பாக விண்ணென்று ஒரு அறை அவள் கன்னத்திலே விழுந்தது. கன்னத்தை பிடித்துக் கொண்டு திகைத்து போய் நின்றாள்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.123).***

*இவ்வாறு வனமாலி மனைவி மீது உள்ள கோபத்தில் அவளை அடித்து துன்புறுத்துகிறான்.*

> ***"யாரையும் சித்திரவதையோ, கொடுமையான மனித நேயமற்ற தாழ்மைசெய்யும் நடத்துமுறைகளுக்கோ தண்டனைக்கோ ஆட்படுத்தக்கூடாது." (மனித உரிமைகள் ஒரு அடிப்படை நூல், ப.28)***

*என்கிறது இந்திய மனித உரிமைகள் சட்டம்.*

***வீட்டை விட்டு வெளியேறுதல்:***

*கணவனின் தாக்குதலுக்குப் பின் சரஸ்வதிக்கும் வனமாலிக்கும் வாக்கு வாதம் முற்றுகிறது. அப்போது சரஸ்வதியின் தம்பி பாரி அங்கு வருகிறான். அவனிடம் தம்பி உன்னோட வந்துடறேன் என்றாள் சரஸ்வதி.*

> ***"இதோ பாருடி போனா போயிட வேண்டியது தான் அப்புறம் டைவர்ஸ் நோட்டீஸ் தான் வரும்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.125)***

*என்றான் வனமாலி.*

> ***"என்னடி வெளியே போய் பெரிய திரைக்கதை ஆசிரியரா ஆயிடுவேன்னு நினைப்பா? என்றான், முதல்ல போங்க வெளியே என்றான்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.126).***

*இதைக் கேட்ட சரஸ்வதிக்குப் கோபம் வந்தது. தென்றலாக இருக்கும் பெண் புயலாக மாறினாள் எப்படி இருப்பாள் என்பதைக் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள்.*

***"ஓ........ ஒரு தென்றல் புயலாகி வருமே …….. ஏ***

***ஓ ஒரு தெய்வம் படி தாண்டி வருமே ………. ஏ***

***கால தேவனின் தர்ம எல்லைகள் மாறுகின்றதே***

***அடுக்களை துடைப்பதும் படுக்கையை விரிப்பதும்***

***அது பெண்ணின் தொழில் இல்லையே***

***சரித்திரம் படைக்கவும், தரித்திரம் துடைக்கவும்***

***வருவதில் பிழை இல்லையே" (புதுமைப் பெண் திரைப்படப் பாடல், 1983)***

*என வைரமுத்து பாடியுள்ளார். தென்றலாக இருந்த சரஸ்வதி புயலாக மாறி சரித்திரம் படைக்கத் தன் கணவனின் வீட்டை விட்டுத் தம்பி பாரியின் வீட்டுக்குச் சென்றுவிடுகிறாள்.*

***சகோதரியை சகோதரன் ஆதரித்தல்:***

*கணவனின் வீட்டை விட்டு வெளியேறிய சரஸ்வதி தனது தம்பி பாரியிடம் தங்குவதற்காக இடம் கேட்கிறாள்.*

> ***"தம்பி வர்றது வர்றே. ஆனா மச்சான்கிட்ட எந்த சண்டையும் பிடிக்காதே. நான் குழந்தைங்கள கூப்பிட்டு வர்றேன் எங்களுக்கும் உன்னோட அப்பார்ட்மெண்ட்ல கொஞ்சம் ஓரத்துல இடம் கொடுங்க மாட்டியா எனக் கேட்கிறாள். அக்கா அப்பார்ட் மெண்டே உன்னுதுதான் அக்கா என்னக்கா கேள்வி இது" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.151)***

*என்று பாரி தன் அக்காவுக்கு நான் இருக்கிறேன் என்பதை ஆறுதலாகத் தெரிவிக்கிறான்.*

> ***"உறவு முடிந்தவுடன் ஏற்படும் துன்பம் தாங்க முடியாதது" (அன்றாட வாழ்வில் தத்துவங்கள், ப.44)***

*என்பதற்கேற்ப கணவன் வனமாலியைப் பிரிந்து மனைவி துன்பமடைகிறாள்.*

***சரஸ்வதிக்குக் கதை எழுத வாய்ப்பு:***

*ஒரு பிரபல பத்திரிக்கையின் ஆசிரியர் சுதர்சனம் சரஸ்வதியைத் தன் பத்திரிக்கையில் தொடர்கதை எழுதுமாறு சரஸ்வதியிடம் தொலைபேசியில் பேசுகிறார். இதைத் தம்பி பாரியிடம் சரஸ்வதி சொல்கிறாள். அதற்குப் பாரி,*

> ***"அவரெல்லாம் கூப்பிட்டுக் கேட்டா ததிகினத்தோம் போட்டுட்டு கொடுக்கிறதுக்கு பெரிய பெரிய கதாசிரியர்கள் காத்துகிட்டு இருக்காங்க நீ என்ன அக்கா நீ என்றான்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.193)***.

*பத்திரிக்கையில் வாய்ப்பு கிடைப்பது அரிது என்று அக்காவிடம் கூறினான். மகிழ்ச்சியும் அடைந்தான்.*

***மனைவியின் அருமை தெரிதல்:***

*சரஸ்வதி வீட்டை விட்டு சென்றதில் இருந்து சாப்பாடு ஒழுங்காக வனமாலிக்கு கிடைக்கவில்லை சமையல்காரன் பச்சையப்பனை காபி போடச் சொன்னால் அவன் போடுகிற காப்பி கழுநீர்த் தண்ணி மாதிரி இருந்தது. வனமாலி மனைவி சரஸ்வதி நன்றாக போடுகிற*

> ***"காஃபியை கழுநீர்த் தண்ணி என்று கேலி செய்தபாவத்துக்கு இன்றைக்கு உண்மையாகவே அப்படியொரு நிலை வந்துவிட்டது என்று நொந்து கொண்டான்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.215)***.

*இப்பொழுது தான் வனமாலிக்கு மனைவி சரஸ்வதியின் அருமை தெரிந்தது.*

> ***"திறமையான செயலுக்குப் பின் உண்டாகும் குற்ற உணர்வு, நிந்தை, உறுத்தும் மனசாட்சி ஆகியவை நிஜமானதும், துயரம் தருவதுமாகும்" (மகிழ்ச்சிக்கு வழி, ப.51)***

*எனத் தவறு செய்த கணவன் தனது தவறை நினைத்து வருந்தத் தொடங்கினான்.*

***மனைவிக்குப் பாராட்டு விழா:***

*பத்திரிக்கை சார்பில் புதிய எழுத்தாளர்களுக்குச் சென்னையில் பாராட்டு விழா நடக்கிறது. அவ்விழாவிற்கு வனமாலியும் வருகிறான்.*

> ***"வனமாலி சரஸ்வதியை நோக்கி வந்தான். என்ன பாராட்டெல்லாம் அமர்க்களப்படுது போல இருக்கு என்றான்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.263)***.

*சரஸ்வதி அருகிலேயே அமர்ந்து கொண்டான். சரஸ்வதி கணவனுக்கு நன்றி கூறுகிறாள்.*

> ***"மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது தடைகளற்ற வாழ்க்கை அல்ல. தடைகளை வெற்றிகொண்டு வாழும் வாழ்க்கை" (சமூக அறிஞர்களின் வாசகங்கள், ப.35)***

*என்ற வாசகத்திற்கேற்பக் கணவனின் பல்வேறு இன்னல்களையும் தடைகளையும் தாண்டி பாரட்டுப் பெற்று சரஸ்வதி மகிழ்கிறாள்.*

***கணவன் மனம் திருந்துதல்:***

பாராட்டு விழா முடிந்ததும் மனம் திருந்திய வனமாலி நேராக அவன் மனைவி சரஸ்வதியின் வீட்டுக்குச் செல்கிறான். அவனை சரஸ்வதி ஆச்சரியமாகப் பார்த்தாள். அவளுக்கு உலகமே தலைகீழாகச் சுற்றுவது போல் இருந்தது. வனமாலி மனைவியின் முன்பு அமர்ந்து கொண்டான். அவள் முகம் சிவந்து போனது. அப்போது வனமாலி சரஸ்வதியிடம்,

> ***"நானும் சும்மா ஒரு அறிவு ஜீவியைப் போட்டு வறுத்து எடுத்து என்னத்தை சாதிக்கப் போறேன் என்ன என் கூட போட்டி போடறேங்கறியா? போடு ரெண்டு பேரும் போடலாம் போட்டி என்றான்" (பேசிவிடு மனமே பேசிவிடு, ப.300).***

அவள் தன்னை மறந்து புன்னகைத்தாள்.

> ***"ஆடவர் நெஞ்சம் அவ்வப்போது மலரும்" (கவிஞர் கண்ணதாசனின் அனுபவ மொழிகள், ப.6)***

என்னும் கண்ணதாசனின் கூற்றுக்கிணங்க தான் செய்த தவறுகளுக்கெல்லாம் வனமாலி தன் மனைவியிடம் மனம் திறந்து மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

***முடிவுரை:***

பெண்ணுக்கு ஆதரவாக எத்தனை பேர் குரல் கொடுத்தாலும் பெண்ணடிமை என்பது இன்றளவும் உள்ளது என்பதை இவ்வாய்வில் அறிய முடிகிறது. இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் மனைவியைத் துன்புறுத்தும் கணவனும் இருக்கிறார்கள் என்பதை ஆய்வு வெளிப்படுத்துகிறது. பெண்ணுக்குத் துன்பம் வரும் போது ஓரளவு தான் பொறுமையைக் கடைபிடிப்பாள் என்பது சரஸ்வதியின் துணிவில் காண முடிகிறது. அக்காவிற்கு வாழ்வில் துன்பம் வரும் போது ஆதரவு தரும் தம்பியும் இருப்பது அக்காவின் மீதுள்ள அன்பை வெளிக்காட்டுகிறது. ஒரு பெண் உயரிய நிலையை அடையும் போது அவளுக்கு இருக்கிற அடிமை நிலை ஒழிக்கப்பட்டு கணவனும் ஏற்றுக் கொள்ளுகிற நிலை வரும் என்பதற்குச் சரஸ்வதியின் செயல் மூலம் விளங்குகிறது. மனைவியை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் வனமாலியின் மனநிலை சமூகத்தில் உள்ள கணவர்களுக்கு இருப்பின் குடும்ப வாழ்க்கை உயர்வடையும் என்ற கருத்து ஆய்வின் மூலம் வெளிக்காட்டப்படுகிறது.

***துணைநூற்பட்டியல்:***


1. இராம.கண்ணப்பன் (ப.ஆ). கவிஞர் கண்ணதாசனின் அனுபவ மொழிகள். பார்வதி கண்ணதாசன் பதிப்பகம், சென்னை-17, முதற்பதிப்பு-2010.
2. ஏற்காடு இளங்கோ. சமூக அறிஞர்களின் வாசகங்கள். http://www.FreeTamilEbooks.com
3. கலைமணி. என்.வி. உலக அறிஞர்களின் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள். http://www.FreeTamilEbooks.com
4. நாராயணன்.க. மேலைநாட்டு மெய்ப்பொருளியல். மாரி பதிப்பகம், புதுச்சேரி-08, இரண்டாம் பதிப்பு-2003.
5. மகிழ்ச்சி அறக்கட்டளை. மகிழ்ச்சிக்கு வழி. மகிழ்ச்சி அறக்கட்டளை வெளியிடு, கனடா.
6. யோகராசா. ஜே. அன்றாட வாழ்வில் தத்துவங்கள். சஜோஸ் அச்சகம், கொழும்பு-2, முதற்பதிப்பு-1995.
7. வைரமுத்து, (1983), புதுமைப் பெண் திரைப்படப் பாடல்.
8. வேணுகோபால். நாக (மொ.ஆ). மனித உரிமைகள் ஒரு அடிப்படை நூல். நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி – 110016. முதற்பதிப்பு-2002.
9. ஜெய்சக்தி. பேசிவிடு மனமே பேசிவிடு. தமிழ்த்தேன் பதிப்பகம், கோயம்புத்தூர், முதற்பதிப்பு-2012.

1. l. Sajos Printing House, Colombo-12, First Edition-1995.